தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 41/ந/2026, நாள் 14.08.2026

S.அன்பழகன்,
துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

1. நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

2. கட்டிட உரிமையாளர், – எதிர்மனுதாரர்கள்
டார்லிங் எலக்ட்ரானிக்ஸ் மொபைல்ஸ் பர்னிச்சர் கட்டிடம்,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.அன்பழகன் என்பவரது 17.12.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.12.2025 அன்று பெறப்பட்டு, 41/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.அன்பழகன் என்பவரது 17.12.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"திருச்சி மாவட்டம், துறையூர் திருச்சி சாலையில், கட்டப்பட்டுள்ள டார்லிங் எலக்ட்ரானிக்ஸ், மொபைல்ஸ், பர்னிச்சர் அமைந்துள்ள கட்டிடம் சுமார் 70 சதுரஅடி நீளத்தில் சுமார் 50 சதுரஅடி அகலத்தில் சுமார் 20,000 சதுரஅடி பரப்பளவில் 3 மாடிகளுடன் அரசு கழிவு நீர் கால்வாயில் மெயின் வாசல்படி வைத்து பார்க்கிங் ஒரு அங்குலம் கூட இடம் விடாமலும், நான்கு புறமும் செட்பேக் 1 அங்குலம் கூட விடாமல் விதிமீறி கட்டப்பட்டுள்ளது. எனவே விதிமீறிய டார்லிங் எலக்ட்ரானிக்ஸ், மொபைல்ஸ், பர்னிச்சர் அமைந்துள்ள கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு பொது நலன் கருதி நான் துறையூர் நகராட்சி ஆணையருக்கு 28.10.2025ல் புகார் அனுப்பி அதனை ஆணையர் 29.10.2025ல் பெற்றுக் கொண்டதாக ஒப்புகை சான்று வந்துள்ளது. ஆணையருக்கு அனுப்பிய புகாரின் நகல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குனருக்கும் அனுப்பினேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே TNCDBR 2019-ன் படி கட்டிட வரைபடத்தில் (BLUE Print) Parking and Set back Area குறிப்பிட்டுதான் அனுமதி நகராட்சியால் வழங்க முடியும் என்று சட்டம் இருப்பதோடு, கட்டிடத்தின் முன்புறம் 5 மீட்டர் Set back கட்டாயம் இருக்க வேண்டும் என்ற சூழ்நிலையில் அதுவும் பிரதான சாலையில் டார்லிங் கட்டிடம் 3 மாடிகளுடன் அரசு கழிவு நீர் கால்வாயில் வாசல்படி வைத்து பார்க்கிங், செட்பேக் வசதியின்றி நகராட்சி டார்லிங் கட்டிடத்திற்கு எவ்வாறு பணி நிறைவுச்சான்று (Completion Certificate) வழங்கியது என்று எனக்கு அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்துவதாக கூறி இருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே நகராட்சி நிர்வாக இயக்குனரின் அறிவுறுத்தல்களை கடைபிடிக்காத காரணத்தால் தான் டார்லிங் கட்டிடம் விதி மீறி கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இயங்கிவருவதாகவும், உரிய கால இடைவெளியில் ஆணையர்கள் இந்த கட்டிடத்தை ஆய்வு செய்திருந்தால் விதி மீறல்களை தடுத்து இருக்கலாம் என்றும் 10 வருடங்களுக்கு மேலாக பணியில் இருந்த அனைத்து ஆணையர்களும் மக்கள் வரிப்பணத்தில் சம்பளம் வாங்கி கொண்டு இந்த கட்டிடத்தை இதுவரை ஆய்வு செய்யாமல் இருந்ததிலிருந்து அனைத்து ஆணையர்களும் மனசாட்சியை அடகுவைத்து விட்டு சிறிதும் வெட்கமின்றி லஞ்சம் வாங்கி உள்ளார்கள் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிருபணமாவதாக குறிப்பிட்டிருந்தேன்.

மேலும் மாண்புமிகு உயர் நீதிமன்றம் விதிமீறல் கட்டிடங்கள் தொடர்பான அனைத்து வழக்குகளிலும் பல்வேறு உத்தரவுகள் போட்டுள்ளதோடு, விதிமீறல் கட்டிடங்களுக்கு ஆதரவாக இருந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்துள்ளதை அறிந்தும் 10 வருடங்களுக்கு மேலாக பார்க்கும் இடமெல்லாம் இது போல் விதிமீறல் கட்டிடங்கள் துறையூர் நகர் முழுவதும் புற்றீசல் போல் இருப்பதிலிருந்து அனைத்து ஆணையர்களும் தங்களை உயர் நீதிமன்றத்தை விட பெரிய ஆட்களாக கருதுகின்றார்கள் என்று ஆணையருக்கு அளித்த புகாரிலேயே கூறி இருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே அனுமதியின்றி செயல்படும் கட்டிடங்கள் மீது தேவையான நடவடிக்கைகளுக்காக மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவை இணைத்து (உச்சநீதிமன்ற உத்தரவு எண். 12199–12200 நாள் 30.04.2025) Roc எண். 3555/2025/ TP3 நாள் 15.05.2025) கடிதம் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்கள் அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும் கடிதம் அனுப்பியுள்ளதை ஆணையருக்கு நினைவூட்டியிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே சமீபத்தில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் கடமையை செய்ய தவறிய I.A.S. ஆபிசருக்கு 1 மாதம் சிறைத்தண்டனை அபராதம் விதித்துள்ளதையும் தவறு செய்த A D G Pயை கைது செய்ய உத்தரவு இட்டதையும் ஆணையருக்கு சுட்டி காட்ட விரும்புவதாக கூறியிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே உச்சநீதி மன்றம் உயர்நீதி மன்றம் விதிமீறிய கட்டிடங்கள் தொடர்பான வழக்குகளில் பல்வேறு உத்தரவு பிறப்பித்துள்ளதை தெரிந்தும், தாராளமாக ஏராளமாக லஞ்சம் பெற்றுக் கொண்டு விதிமீறல் கட்டிடங்கள் துறையூர் நகரம் முழுவதும் புற்றீசல் போல் ஏராளமாக உருவாக காரணமாக இருந்து தமிழ்நாட்டிலேயே விதிமீறல் கட்டிடங்கள் அதிகம் உள்ள சிறப்பு நகராட்சி என்ற முதல் இடத்தை பிடித்து பெருமைக்குரிய சாதனையை படைத்த நகராட்சி என்றால் அது துறையூர் நகராட்சி என்றால் அது மிகையல்ல என்று கருதுவதாக குறிப்பிட்டிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே ஆணையர் மக்கள் வரிப்பணத்தில் சம்பளம் பெறுவதை மனதில் வைத்து மனசாட்சிபடி நேர்மையோடு டார்லிங் கட்டிடத்தை நேரில் கள ஆய்வு செய்து அந்த கட்டிடம் TNCDBR 2019ன்படி கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் Set back எவ்வளவு விடப்பட்டுள்ளது என்பதையும், கட்டிடத்தின் முன்புறம் 5 மீட்டர் Set back விடப்பட்டுள்ளது என்பதையும் கட்டிட வரைபடத்தில் பார்க்கிங் அளவு காண்பிக்கப்பட்டு நகராட்சியும் அனுமதி

பெறப்பட்டுள்ளதா என்பதையும் 3மாடி கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டதா என்பதையும் கட்டிட வரைபடத்தில் உள்ளவாறு கட்டிடம் கட்டப்பட்டு கட்டிட நிறைவுச் சான்று நகராட்சியால் வழங்கப்பட்டதா என்பதை ஆய்வு செய்து டார்லிங் கட்டிடம் விதிமீறி கட்டப்பட்டுள்ளது தெரியவந்தால் உச்சநீதிமன்ற உத்தரவின் கீழ் டார்லிங் கட்டிடத்தை இடித்து அகற்றுமாறு கேட்டு கொண்டதோடு தலைமை செயலாளரின் சுற்றறிக்கைபடி 30 நாட்களுக்குள் பதில் அளிக்காவிட்டால் மனுநீதிச் சோழன் போல் நீதி வழங்கும் உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் போல் சிறப்பான நீதி வழங்கும் தங்களிடமும் ஆணையருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய நேரிடும் என்று கூறி இருந்தேன். எனவே, நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே மாண்புமிகு உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்றம் உத்தரவுகளை சுட்டி காட்டியதோடு தலைமை செயலாளரின் சுற்றறிக்கைபடி 30 நாட்களுக்குள் எனக்கு பதில் அளிக்காவிட்டால் மாண்புமிகு உயர்நீதிமன்றம், மாண்புமிகு தங்களிடமும் வழக்கு தாக்கல் செய்வேன் என்று கூறியும் இதுவரை விதிமீறிய டார்லிங் கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதிலிருந்து விதிமீறிய டார்லிங் கட்டிடத்திற்கு ஆணையர் உடந்தையாக செயல்படுகின்றார் என்பது நன்கு விளங்குகின்றது.

எனவே, விதிமீறிய கட்டிடத்திற்கு ஆணையர் உடந்தை என்று நான் கருதுவதால் அவர் குற்றத்தை அவரே விசாரிப்பது இயற்கை நீதிப்படி சரியாக இருக்காது என்று நான் கருதுவதோடு ஆணையர் கொடுக்கும் வாக்குமூலம், அறிக்கை அனைத்தும் டார்லிங் கட்டிட உரிமையாளருக்கு சாதகமாக கொடுப்பதோடு, எப்படியும் எப்பாடுபட்டாவது டார்லிங் கட்டிட நிர்வாகியை காப்பாற்றிவிடுவார்.

எனவே, அநியாயத்தை கண்டு ஆவேசப்பட்டு தமிழ்நாட்டு மக்களுக்கு சிறந்த நீதி வழங்கி தமிழக மக்களின் காவல் தெய்வமாக திகழும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் போன்று தாங்களும் நேர்மையோடு நீதி வழங்கும் ஆற்றலை பெற்றுள்ளதால் மரியாதைக்குரிய தாங்கள் டார்லிங் கட்டிடத்தை இடநேராய்வு செய்து அந்த கட்டிடம் TNCDBR 2019ன்படி கட்டப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்தும், 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டிடம் கட்டப்பட்டிருந்தால் வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளின்படி பார்க்கிங் வசதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும் ஆய்வு செய்து கட்டிட வரைபடத்தில் உள்ளபடி கட்டிடம் கட்டப்பட்டு கட்டிட நிறைவு சான்று நகராட்சியால் வழங்கப்பட்டுள்ளதா என்பதை கண்டறிந்து விதிமீறி டார்லிங் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டால் விதிமீறி செயல்படும் டார்லிங் கட்டிடத்தை மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் இடித்து அகற்றுமாறு பணிவுடன் மதிப்புமிக்க தங்களை கேட்டு கொள்வதோடு விதிமீறிய கட்டிடத்திற்கு உடந்தையாக இருந்த துறையூர் நகராட்சி ஆணையர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு கீழ்படிந்து தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்". என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனுமீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.02.2026 நாளிட்ட அறிவிப்பு கடிதம் மூலம் துறையூர் நகராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

3. துறையூர் நகராட்சி ஆணையர் இம்முறைமன்ற நடுவத்திற்கு எந்தவித அறிக்கையையும் சமர்ப்பிக்கவில்லை.

4. அதனைத் தொடர்ந்து மனுதாரர், எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரரான டார்லிங் எலக்ட்ரானிக்ஸ் மொபைல்ஸ், பர்னிச்சர் கட்டிட உரிமையாளர் ஆகியோரை 10.06.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 12.05.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் தனது மின்னஞ்சல் கடித நாள் 06.06.2026–ல் தான் வீடு மாறுதலாகி சென்றபோது வாகனத்தில் இருந்து தவறி கீழே விழுந்து கால் எலும்பு முறிவு ஏற்பட்டதால் 10.06.2026ல் நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை இருப்பதால் மேற்படி விசாரணைக்கு ஆஜராக இயலாது” எனத் தெரிவித்துள்ளார்.

6. மேலும் மேற்கண்ட மின்னஞ்சலைத்தொடர்ந்து தனது 06.06.2026 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“திருச்சி மாவட்டம், துறையூர் திருச்சி சாலையில் கட்டப்பட்டுள்ள டார்லிங் எலக்ட்ரானிக்ஸ், மொபைல்ஸ், பர்னிச்சர் உள்ள கட்டிடம் சுமார் 70 சதுர அடி நீளத்தில் சுமார் 50 சதுர அடி அகலத்தில் சுமார் 20,000 சதுர அடி பரப்பளவில் 3 மாடிகளுடன் அரசு கழிவுநீர் கால்வாயில் மெயின் வாசல்படி வைத்து பார்க்கிங்கென்று 1 அங்குலம் கூட இடம் விடாமல் கட்டிடத்தை சுற்றி 4 பக்கமும் 1 அங்குலம் கூட காலி இடம் விடாமலும் (Set back) விதிமீறி கட்டப்பட்டுள்ளது. விதி மீறிய டார்லிங் எலக்ட்ரானிக்ஸ் கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்குமாறு துறையூர் நகராட்சி ஆணையருக்கு புகார் கொடுத்தும் லஞ்சம் பெற்றுக்கொண்டு இதுவரை ஆணையர் நடவடிக்கை எடுக்கவில்லை.

ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்தில் நடந்த பெரும்பாலான வழக்குகளில் நான் புகார் கொடுத்தற்கு பின்பு தான் பார்க்கிங் இடம் வாங்கியதாக அனைத்து கட்டிட நிர்வாகிகளும் இந்த முறை மன்றத்தில் பொய்யாக கூறி உள்ளதாலும், கட்டிட நிர்வாகிகளுக்கு ஆதரவாக பார்க்கிங் இடம் புதிதாக வாங்கியுள்ளதாக ஆணையர்களும் பொய்யாக கூறி வருவதால் இந்த வழக்கிலும் பார்க்கிங் இடம் கட்டிட வரைபடத்தில் காண்பிக்காமல் புதிதாக வாங்கி உள்ளதாக கூறினால் பார்க்கிங் இடம் வாங்கியதற்கான இடத்தின் ஆவணத்தை நகராட்சியில் பதிவு செய்து பார்க்கிங் இடத்திற்கான ரசீது நகராட்சி மூலம் வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா என்பதையும் பார்க்கிங் இடம் வாங்கியதற்கான இடத்தின் ஆவணத்தை உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்தில் தாக்கல் செய்ய சொல்லி அதனை தாங்கள் வழக்கின் உத்தரவில் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

மேலும் உள்ளாட்சி அதிகார வணிக உபயோக கட்டிட வரம்பு (தரைதளம் + முதல் தளம்) 2000 சதுர அடி என்று விதிமுறை இருப்பதால் டார்லிங் எலக்ட்ரானிக்ஸ் அமைந்துள்ள கட்டிடம் உள்ளாட்சி அதிகார வணிக உபயோக கட்டிட வரம்பு விதிப்படி தான் கட்டப்பட்டுள்ளதா என்பதையும் டார்லிங் எலக்ட்ரானிக்ஸ் அமைந்துள்ள கட்டிடம் மொத்தம் எத்தனை ஆயிரம் சதுரஅடியில் அமைந்துள்ளது என்பதை துறையூர் நகராட்சி ஆணையரிடம் அறிக்கை பெற்று தாங்கள் உத்தரவில் தொவிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்தில் நடந்த பொரும்பாலான வழக்குகளில் கட்டிட அனுமதி பெறப்பட்ட ஆவணம் நகராட்சியிடம் இல்லை என்று துறையூர் நகராட்சி ஆணையர்கள் தொடர்ந்து கூறி வருவதால் சமீபத்தில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வில் நடந்த CMP No. 4315/2026 வழக்கில் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கோப்பு தொலைந்து விட்டது என்று கூறியதற்கு இது போதுமான காரணமில்லை என்றும் அரசு அலுவலகங்கள் கோப்பு சுற்று முறை என்று சொல்லி தப்பிக்க முடியாது என்றும் இது எதிர் தரப்புடன் சேர்ந்து கூட்டுசதியாக இருக்கலாம் என்றும் உச்சநீதிமன்றம் ஏற்கனவே பல தீர்ப்புகளில் தெளிவாக கூறியதாக கூறி இந்த வழக்கை விஜிலன்ஸ் துறை விசாரித்து உண்மையை கண்டறிய வேண்டும் என்று கடந்த 20.02.2026ல் உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் ஆவணம் இல்லை என்று கூறியதற்காக கல்வித்துறை இயக்குனருக்கு ரூ.50 லட்சம் அபராதம் உயர் நீதிமன்றம் விதித்துள்ளது. எனவே இந்த வழக்கிலும் ஆவணம்

இல்லை என்று ஆணையர் கூறினால் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின்கீழ் நகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே மாண்புமிகு உச்சநீதிமன்றம் 12199–12200 நாள் 30.04.2025 வழக்கின் உத்தரவில் அனுமதியற்ற கட்டிடத்தை முறை படுத்தக்கூடாது என்றும் அனுமதியற்ற கட்டிடத்தை இடிப்பது ஒன்றுதான் வழி என்றும் இதற்கு வேறுவழி இல்லை என்று திட்டவட்டமாக கூறியுள்ள நிலையில் மாண்புமிகு தங்கள் முன்பு நடைபெற்ற பெரும்பாலான வழக்குகளில் விதிமீறிய கட்டிட நிர்வாகிகள் அனுமதி பெறாத கட்டிடத்தை முறைபடுத்த 80–Aன் கீழ் மேல் முறையீடு செய்து மனு அளித்துள்ளதை தாங்கள் சட்டப்படி மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவிற்கு எதிராக ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதை தாங்கள் உத்தரவில் விளக்கவும்.

மேலும் தமிழ் நாட்டில் நடைமுறையில் உள்ள Tamil Nadu Fire Service Rules, 1990 பற்றிய முக்கிய விதிகள், 1985 தீயணைப்பு கட்டிடத்தின் (FIRE SERVICE ACT) கீழ் உருவாக்கப்பட்டுள்ள விதிகளின்படி எல்லா வணிக உபயோக கட்டிடங்களும் அதுவும் நகராட்சி அனுமதி பெற்று நகராட்சி உரிமம் பெற்று அனைத்து கட்டிடங்களும் தீ பாதுகாப்பு விதிகளை பின்பற்ற வேண்டும் FIRE LICENCE அல்லது NOC அவசியம் தீயணைப்பு துறையில் வாங்க வேண்டும் என்ற அடிப்படையில் டார்லிங் எலக்ட்ரானிக்ஸ் கட்டிடம் தீயணைப்பு துறையிடம் அனுமதி பெற்றுள்ளதா என்பதை ஆணையரிடம் அறிக்கை பெற்று உத்தரவில் தெரிவிக்க கேட்டுக்கொள்கிறேன். இது தவிர National Building Code of India (NBC) இந்தியாவில் கட்டிடங்கள் எப்படி திட்டமிட்டு பாதுகாப்பாக பயன்படுத்த வேண்டும் என்பதற்கான விதிகளை வகுத்துள்ளது. NBC முக்கிய பகுதிகளில் (Parts) 4இல் FIRE AND LIFE SAFETY தீயணைப்பு பாதுகாப்பு கட்டாயம் என்று கூறியதோடு நகராட்சி அனுமதி பெற NBC அடிப்படையாக இருக்கும் என்று கூறி உள்ளது. எனவே டார்லிங் எலக்ட்ரானிக்ஸ் கட்டிடம் NBC விதிகளை பின்பற்றி செயல்படுகின்றதா என்பதை தாங்கள் உத்தரவில் தெரிவிக்க கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் நடந்த முறையீட்டு மனுக்கள் 102/ந/2025, 104/ந/2025 ஆகிய இரண்டு வழக்கு விசாரணையின் போது தங்கள் முன்பு 10.06.2025ல் நேரடியாக ஆஜராகி சத்திய பிரமாணம் செய்து அளித்த வாக்கு மூலத்தில் துறையூர் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) மற்றும் மேலாளர் அம்பிகா அவர்கள் மேற்க்கண்ட 102/ந/2025 ராஜா சில்க்ஸ் 104/ந/2025 ஸ்ரீ குமரன் டெக்ஸ் இரண்டின் ஆவணம் நகராட்சியில் இல்லை என்று தெரிவித்து விட்டு ந.க.எண்.2654/2025/சி2, நாள் 01.08.2025 கடிதம் மூலம் எனக்கு ராஜா சில்க்ஸ், ஸ்ரீ குமரன் டெக்ஸ் இரண்டின் கட்டிட அனுமதி உத்தரவு மற்றும் கட்டிட வரைபட நகலும் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

எனவே, மதிப்புமிக்க நீதிபதி அந்தஸ்தில் இருக்கும் தங்கள் முன்பாக சத்திய பிரமாணம் செய்து ஆவணம் இல்லை என்று கூறிவிட்டு அதற்கு நேர் மாறாக ஆவணம் பெற்றுக் கொள்ளுமாறு எனக்கு கடிதம் அனுப்பிய துறையூர் நகராட்சியின் செயலை பார்க்கும் போது அனைத்து விதிமீறிய கட்டிட நிர்வாகிகளுடன் கை கோர்த்து கொண்டு சட்டத்தை மீறி செயல்படுவது நன்கு விளங்குகின்றது.

எனவே, இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் குற்றவாளியும் நீதிபதியும் ஒருவராக இருக்க முடியாது என்பதை கவனத்தில் கொண்டு மரியாதைக்குரிய தாங்கள் துறையூரில் உள்ள டார்லிங் எலக்ட்ரானிக்ஸ் கட்டிடத்தை நேரில் இடநேராய்வு செய்து அந்த கட்டிடம் கட்டிட வரைபடத்தில் உள்ளவாறு முறையாக கட்டப்பட்டு நகராட்சியிடம் பணி நிறைவுச் சான்று பெற்றுள்ளதா என்பதை ஆய்வு செய்து அந்த கட்டிடம் விதி மீறி கட்டப்பட்டுள்ளது தெரிய வந்தால் மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவு 12199 – 12200 நாள் 30.04.2025 இன்படி இடித்து அகற்றுமாறும், நான் புகாரில் கூறியது பொய் என்றால் என்மீது எடுக்கும் நடவடிக்கையை

மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். டார்லிங் கட்டிடத்தின் மீது தீயணைப்பு துறை இயக்குனரிடத்தில் புகார் அளித்துள்ளேன்''. என தெரிவித்துள்ளார்.

7) எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க. எண்.4971/2025 எப்1, நாள் 05.06.2026ல், கடிதத்தில் மேற்படி டார்லிங் வணிக வளாகம் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக துறையூரில் இயங்கி வருவதாக தெரியவருகிறது. அதில் தரைத்தளத்தில் 2,624.00 சதுரடி பரப்பளவில் டார்லிங் வணிக வளாக கட்டிடம் மற்றும் 652.8 சதுரடி பரப்பளவில் வீடு இயங்கி வருவதாக தெரியவருகிறது. முதல் தளத்தில் 3,491.02 சதுரடி பரப்பளவில் டார்லிங் வணிக வளாகம் கட்டிடம் இயங்கி வருகிறது. இரண்டாம் தளத்தில் 3,491.02 சதுரடி பரப்பளவில் டார்லிங் வணிக வளாகம் கட்டிடம் இயங்கி வருகிறது. மூன்றாம் தளத்தில் 1,068.08 சதுரடி பரப்பளவில் RCC Roof அமையப்பெற்ற குடோன் மற்றும் கழிவறை உள்ளது. 1,827.6 சதுரடி பரப்பளவில் GI Sheet அமையப்பெற்ற குடோன் உள்ளது. 292 சதுரடி மற்றும் 120 சதுரடி பரப்பளவில் RCC Roof அமையப்பெற்ற குடோன் அமைந்துள்ளது. மொட்டை மாடியில் Solar Panel மற்றும் Tank உள்ளது. பார்க்கிங் வசதி இல்லை. முன்பக்க, பின்பக்க திறவிடங்கள் எதுவும் இல்லை.

மேற்படி 10.12.2025 அன்று கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ள விவரம், சொத்துவரி விதிப்பு விவரம், குடிநீர் குழாய் இணைப்பு விவரம் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் மூன்று தினங்களுக்குள் நகராட்சியில் சமர்பிக்குமாறு தெரிவித்து அதன் உரிமையளருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. இந்நாள் வரை எவ்வித ஆவணங்களையும் உரிமையாளர் நகராட்சியில் சமர்ப்பிக்கவில்லை.

அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரம் நகராட்சி அலுவலகத்தில் இல்லை. எனவே, மேற்படி, கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135(1)ன் கீழ் டார்லிங் வணிக வளாக உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்''. என தெரிவித்துள்ளார்.

8) எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க. எண்.4971/ /2025 எப்1, நாள் 09.06.2026ல், கடிதத்தில் மேற்படி டார்லிங் வணிக வளாகம் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக துறையூரில் இயங்கி வருவதாக தெரியவருகிறது. அதில் தரைத்தளத்தில் 2,624.00 சதுரடி பரப்பளவில் டார்லிங் வணிக வளாக கட்டிடம் மற்றும் 652.8 சதுரடி பரப்பளவில் வீடு இயங்கி வருவதாக தெரியவருகிறது. முதல் தளத்தில் 3,491.02 சதுரடி பரப்பளவில் டார்லிங் வணிக வளாகம் கட்டிடம் இயங்கி வருகிறது. இரண்டாம் தளத்தில் 3,491.02 சதுரடி பரப்பளவில் டார்லிங் வணிக வளாகம் கட்டிடம் இயங்கி வருகிறது. மூன்றாம் தளத்தில் 1,068.08 சதுரடி பரப்பளவில் RCC Roof அமையப்பெற்ற குடோன் மற்றும் கழிவறை உள்ளது. 1,827.6 சதுரடி பரப்பளவில் GI Sheet அமையப்பெற்ற குடோன் உள்ளது. 292 சதுரடி மற்றும் 120 சதுரடி பரப்பளவில் RCC Roof அமையப்பெற்ற குடோன் அமைந்துள்ளது. மொட்டை மாடியில் Solar Panel மற்றும் Tank உள்ளது. கட்டுமானத்தின் மொத்தப்பரப்பளவு 13,565 சதுரடி ஆகும். தரைத்தளத்திற்கு 3,276 (கூடுதலாக 63) 3,213 சதுரடி மற்றும் முதல்தளத்திற்கு 3,491 (கூடுதலாக 278) 3213 சதுரடிக்கு மட்டும் அனுமதி பெறப்பட்டுள்ளது. இரண்டாம் தளம் 3,491 சதுரடி மற்றும் மூன்றாம் தளம் 3307 சதுரடி அனுமதி பெறாமலும் மற்றும் 341 சதுரடி அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. முன்பக்கம் , பின்பக்கம் திறவிடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. வாகனம் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

வரிவிதிப்பு எண்கள் 087/14/900766, 087/014/900767, 087/014/900768, 087/014/901121, 087/014/901122, 087/014/901024, மற்றும் 087/014/901025, ஆகிய ஏழு வரிவிதிப்புகளில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படவில்லை என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, மேற்படி, கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022))பரிவு 133, 135(1)ன் கீழ் கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்''. என தெரிவித்துள்ளார்.

9. எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க. எண்.4971/எப்1/2025, நாள் 08.06.2026ல், 10.06.2026 அன்று நடைபெற உள்ள விசாரணைக்கு ஆணையர் அவர்களால் ஆஜராக இயலாத நிலை உள்ளதால், ஆணையருக்கு பதிலாக இந்நகராட்சியில் நகரமைப்பு ஆய்வர் திருமதி. த. தவமணி அவர்கள் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதை தொடர்ந்து நகராட்சியின் நகரமைப்பு ஆய்வர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்கு மூலத்தை பதிவு செய்துள்ளார்.

"டார்லிங் வணிக வளாக கட்டிடம் கடந்த 5 வருடங்களுக்கு மேலாக துறையூரில் இயங்கிவருவதாக தெரியவருகிறது. அதன் தரைத்தளத்தில் 2624.00 சதுரடி பரப்பளவில் டார்லிங் வணிக வளாக கட்டிடம் மற்றும் 652.8 சதுரடி பரப்பளவில் வீடு இயங்கி வருவதாக தெரியவருகிறது. முதல் தளத்தில் மற்றும் இரண்டாம் தளங்களில் தலா 3491.02 சதுரடி பரப்பளவில் டார்லிங் வணிக வளாகம் கட்டிடம் இயங்கி வருகிறது. மூன்றாம் தளத்தில் 1068.08 சதுரடி பரப்பளவில் RCC Roof அமையப்பெற்ற குடோன் மற்றும் கழிவறையும் 1,827.60 சதுரடி பரப்பளவில் G1 sheet அமையப்பெற்ற குடோனும் 292 சதுரடி மற்றும் 120 சதுரடி பரப்பளவில் இரு RCC Roof அமையப்பெற்ற குடோன்களும் அமைந்துள்ளது. மொட்டை மாடியில் Solar Panel மற்றும் Tank உள்ளது. கட்டிடத்தின் மொத்த பரப்பளவு 13,565 சதுரடியாக உள்ளது.

மேற்படி கட்டிடத்திற்கு 63 சதுரடி தரைதளத்திற்கும், 278 சதுரடி முதல் தளத்திற்கும் அனுமதிக்கப்பட்ட அளவினைவிட கூடுதலாக உள்ளது. இரண்டாவது மற்றும் மூன்றாவது தளங்களுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. கட்டிடத்தில் பார்க்கிங் வசதி ஏற்படுத்தபடவில்லை. கட்டிடத்தின் ஒருபுறம் மட்டும் திறவிடம் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கட்டிடத்திற்கு 087/14/900766, 087/014/900767, 087/014/900768, 087/014/901121, 087/014/901122, 087/014/901024, மற்றும் 087/014/901025, ஆகிய ஏழு வரிவிதிப்புகளில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. மேற்படி கட்டிடத்திற்கு குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லை.

எனவே, மேற்படி கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135 (1)ன் கீழ் கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு, தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விவரத்தினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

10) 2-ம் எதிர்மனுதாரரான டார்லிங் எலக்ட்ரானிக்ஸ் கட்டிடத்தின் உரிமையாளர் திரு. R. ராஜேந்திரன் என்பவர் 10.06.2026 அன்றைய விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"எங்களது டார்லிங் எலக்ட்ரானிக்ஸ் அமைந்துள்ள கட்டிடம் எங்களது சித்தப்பா அவர்களை பங்குதாரராக கொண்டு கட்டப்பட்டது மேற்படி கட்டுமானத்திற்கு நகராட்சியிடமிருந்து அனுமதி பெற்று TIIC நிறுவனம் மூலம் கடன் பெற்று கட்டப்பட்டுள்ளது. எங்களது 3 மாடி கட்டிடம் கட்டப்பட்டதற்கான நகராட்சி அனுமதி மற்றும் வரைபடம் எனது சித்தப்பாவிடம் இருந்தது. எனது சித்தப்பா 20 ஆண்டுகளுக்கு முன்னர் மரணமடைந்தால், அவர் எங்கு வைத்துள்ளார் என்ற விவரம் தெரியாததால், என்னால் நகராட்சியிடமிருந்த, பெறப்பட்ட அனுமதியினை சமர்ப்பிக்க இயலவில்லை. மேலும் பல வருடங்களாக நகராட்சியிலிருந்து நகராட்சி அனுமதியின் நகல் வேண்டி கேட்டதற்கு, நகராட்சியில் நகல் இல்லை என தெரிவித்துள்ளனர். மேலும் கட்டிடம் தொடர்பான சொத்துவரி எனது பெயரிலும் எனது சித்தப்பாவின் மகன் (மனநிலை பாதிக்கப்பட்டவர்) பெயரிலும் நிலுவையின்றி செலுத்தி வருகிறோம் என்ற விவரம் தெரிவித்துள்ளார்.

11) மனுதாரரின் புகார் மனு, அறிக்கை, எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம், 2ம் எதிர்மனுதாரரான டார்லிங் எலக்ட்ரானிக்ஸ், மொபைல்ஸ், பர்னிச்சர் கட்டிட உரிமையாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

திருச்சி மாவட்டம், துறையூர்–திருச்சி சாலையில் கட்டப்பட்டுள்ள டார்லிங் எலக்ட்ரானிக்ஸ், மொபைல்ஸ், பர்னிச்சர் அமைந்துள்ள கட்டிடம் 70 அடி நீளத்தில், 50 அடி அகலத்தில் 20000 சதுர அடி பரப்பளவில் 3 மாடிகளுடன் அரசு கழிவுநீர் கால்வாயில் மெயின் வாசல்படி வைத்து பார்க்கிங் 1 அங்குலம் கூட விடாமல் விதி மீறி கட்டியுள்ளதாகவும், விதி மீறிய டார்லிங் எலக்ட்ரானிக்ஸ், மொபைல்ஸ், பர்னிச்சர் அமைந்துள்ள கட்டிடத்தை இடித்து அகற்ற துறையூர் நகராட்சி ஆணையருக்கு 28.10.2025ல் புகார் அனுப்பியுள்ளதும், அதன் நகல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குநருக்கும் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், மேற்படி கட்டிடம் TNCDBR 2019ன்படி கட்டிடத்தை சுற்றி நான்கு பக்கமும் set back விடப்பட்டு, 3 மாடி கட்டுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து மேற்படி விதிமீறி கட்டப்பட்டுள்ள டார்லிங் எலக்ட்ரானிக்ஸ், மொபைல்ஸ், பர்னிச்சர் அமைந்துள்ள கட்டிடத்தை உச்ச நீதிமன்ற உத்தரவின் கீழ் இடித்து அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார் என்பது அவரது மனு மற்றும் அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது.

டார்லிங் எலக்ட்ரானிக்ஸ், மொபைல்ஸ், பர்னிச்சர் அமைந்துள்ள கட்டிடம் கடந்த 5 வருடங்களாக துறையூரில் இயங்கி வருவதும், தரைத்தளத்தில் 2624 சதுர அடி பரப்பளவில் டார்லிங் வணிக வளாக கட்டிடம் மற்றும் 652.8 சதுர அடி பரப்பளவில் வீடு இயங்கி வருவதும், முதல் தளத்தில் 3491.02 சதுர அடி பரப்பளவில் டார்லிங் வணிக வளாகம் கட்டிடம் இயங்கி வருவதும், இரண்டாம் தளத்தில் 3491.02 சதுர அடி பரப்பளவில் டார்லிங் வணிக வளாக கட்டிடம் இயங்கி வருவதும், மூன்றாம் தளத்தில் 1068.08 சதுர அடி பரப்பளவில் RCC Roof அமையப்பெற்ற குடோன் மற்றும் கழிவறை உள்ளதும், 292 சதுர அடி மற்றும் 120 சதுர அடி பரப்பளவில் RCC Roof அமையப்பெற்ற குடோன் அமைந்துள்ளதும், மொட்டை மாடியில் Solar Panel மற்றும் Tank உள்ளதும், பார்க்கிங் வசதி இல்லை என்பதும், கட்டிடத்தின் ஒருபுறம் மட்டும் திறவிடம் அமைக்கப்பட்டுள்ளதும், கட்டிடத்தின் மொத்த பரப்பளவு 13,565 சதுர அடியாக உள்ளதும், மேற்படி கட்டிடத்தில் தரைதளத்திற்கு வழங்கப்பட்ட அனுமதியை விட 63 சதுர அடி கூடுதலாகவும், முதல் தளத்தில் அனுமதியைவிட 278 சதுர அடி கூடுதலாகவும் கட்டப்பட்டுள்ளதும், இரண்டாம் மற்றும் மூன்றாம் தளங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பதும், எனவே மேற்படி கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998

(திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135 (1)ன் கீழ் கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நவடிக்கையில் உள்ளது என்பதும் எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் அறிக்கை மற்றும் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

டார்லிங் எலக்ட்ரானிக்ஸ், மொபைல்ஸ், பர்னிச்சர் அமைந்துள்ள கட்டிடம் தங்களது சித்தப்பாவை பங்குதாரராக கொண்டு கட்டப்பட்டது என்பதும், மேற்படி கட்டுமானத்திற்கு நகராட்சியிடமிருந்து அனுமதி பெற்று TIIC நிறுவனம் மூலம் கடன் பெற்று கட்டப்பட்டுள்ளது என்பதும், தங்களது 3 மாடி கட்டிடம் கட்டப்பட்டதற்கான நகராட்சி அனுமதி மற்றும் வரைபடம் தங்களது சித்தப்பாவிடம் இருந்ததாகவும் 20 ஆண்டுகளுக்கு முன்னர் மரணமடைந்துவிட்டதால் நகராட்சியிடமிருந்து பெறப்பட்ட அனுமதியினை சமர்ப்பிக்க இயலவில்லை என்பதும், பல வருடங்களாக நகராட்சியிடம் அனுமதியின் நகல் வேண்டி கேட்டதற்கு நகராட்சியில் நகல் இல்லை என தெரிவித்துவிட்டனர் என்பதும், கட்டிடம் தொடர்பான சொத்து வரி தனது பெயரிலும் தனது சித்தப்பாவின் மகன் (மனநிலை பாதிக்கப்பட்டவர்) பெயரிலும் நிலுவையின்றி செலுத்தி வருவதும், 2ம் எதிர்மனுதாரரான டார்லிங் எலக்ட்ரானிக்ஸ், மொபைல்ஸ், பர்னிச்சர் உரிமையாளரின் வாக்குமுலத்திலிருந்து அறிய முடிகிறது.

2–ம் எதிர்மனுதாரர் தன்னுடைய வாக்குமூலத்துடன் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் வீட்டு வசதித்துறை, சென்னைக்கு முகவரியிட்டு, இம்முறைமன்ற நடுவத்திற்கு நகலிடப்பட்ட கடிதம் ஒன்றை இணைத்து சமர்ப்பித்துள்ளார். அதில் தங்களது கட்டிடம் தொடர்பாக தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 80–Aன்படி அரசுக்கு மேல் முறையீடு செய்து கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

12. இந்நேர்வில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.1028/2024 (W.P.No.1028/2024)–ல், 12.08.2024 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

"9. In view of the order passed by the Government in exercise of its power under Section 80-A of the Town and Country Planning Act, the impugned order passed by the first respondent giving recommendations is totally unwarranted. It is true that the impugned order is prior to the order of the State Government. When there is a statutory remedy available to the person who has put up unauthorized construction, in such circumstances, exercising power under the Tamil Nadu Local Bodies Ombudsman Act to issue directions or recommendations to the official respondents will prejudice the statutory remedy available to the petitioner and the rights of individuals.xxx xxx xxx.".

எனவே, புகாருக்குள்ளான கட்டிடத்தினை வரன்முறை செய்துகொள்ள Tamil Nadu Town and Country Planning Act, 1971, பிரிவு 80–Aன்படி அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளதாக இரண்டாம் எதிர்மனுதாரரான கட்டிட உரிமையாளரால் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதன் உண்மைத்தன்மையினை கண்டறிந்து இது குறித்து அரசிடமிருந்து பெறப்படும் ஆணையின் அடிப்படையில் உரிய சட்டபூர்வ தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி துறையூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ம் ஆண்டு ஆகஸ்டு, 14–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஓம்/–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. S.அன்பழகன்,
த/பெ ப. திரு.சீனிவாசன்,
எண்.155, அசோக் நகர்,
முசிறி மெயின்ரோடு,
துறையூர் (அஞ்சல் & வட்டம்)
திருச்சிராப்பள்ளி மாவட்டம் – 621 010.

2) நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3) கட்டிட உரிமையாளர்,
டார்லிங் எலக்ட்ரானிக்ஸ், மொபைல்ஸ்,
பர்னிச்சர் கட்டிடம், திருச்சி சாலை,
துறையூர் – 621010,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5) இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச்செயலர்.
இகோப்பு/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.